[1967 ஜூலை 8

அண்ணாமலை நகருக்கருகில் உப்பனாற்றின்மீது பாலம்

*220. வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) சிதம்பரம் தாலூக்கா, அண்ணாமலை நகர், சந்திரமலையிலிருந்து பேட்டை வரகூர் நடுவில் இருக்கும் உப்பனாற்றின் மீது ஒரு பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : அண்ணாமலை நகருக்கு பக்கத்திலுள்ள பேட்டை வரகூரிலிருந்துதான் எல்லாப் பொருள்களும் வர வேண்டும். நடுவில் இருக்கும் உப்பனாற்றின் குறுக்கே வருவதாய் இருந்தால் பாலம் இல்லை. தண்ணீரைச் சுற்றிக் கொண்டு வருவதாக இருந்தால் 8 மைல் தூரம் வரவேண்டும். ஆகவே, இந்தப்பாலத்தைக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்களுடைய சிபாரிசின் அடிப்படையில்தான் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அது, மூன்றாவது திட்டக் காலத்தில் மேற்படி வரிசைக்கிரமப்படி எடுத்து முடித்த பிறகு, நான்காவது திட்டத்தில் மேற்கொள்ளும் 212 இடங்கள் இருக்கின்றன, அவற்றில் வரிசைக்கிரமப்படி வருகிற பாதை கவனிக்கப்படும். அப்படியின்றி, தனியாக எடுத்துச் செய்ய வேண்டுமென்று சொல்லும் நிலையில், விசேஷ காரணம் எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. ஆகவே, விசேஷ காரணம் சுட்டிக்காட்டி, வருமானால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இதுபற்றி ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரிந்தால் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட சிபாரிசுகள் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை.

மாம்பாக்கம்-திருப்போரூர் சாலை

*221 வினா.—திரு முனு ஆதி : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியைச் சேர்ந்த, மாம்பாக்கத்திலிருந்து காயாறு, வெண்பெடு, இன்னளூர் வழியாக திருப்போரூர் வரை பாதை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

1967 ஜூலை 8]

(இ) இத்திட்டத்தினை பெருவழித்துறை ( )யினரிடம் ஒப்படைக்கும் உத்தேசமுண்டா?

(உ) இத்திட்டத்திற்கு செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஒன்பது மைல் நீளமுள்ள மாம்பாக்கம்-திருப்போரூர் சாலையானது நிதிவசதிக்கேற்ப கிராமப் பணித் திட்டத்தின் கீழ் திருப்போரூர் ஊராட்சி ஒன்றியினால் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகிறது. இது வேறு ஒரு திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை.

(இ) இப்படி ஒரு யோசனை கூறப்பட்டுள்ளது.

(உ) இதற்கு ரூபாய் 4 லட்சம் வரை செலவாகும். ஆனால் இதற்காக மதிப்பீடு எதுவும் தயாரிக்கப்படவில்லை.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, இந்த காயாறு, வெண்பெடு கிராமங்களில் 320 வீடுகள் இருக்கின்றன. அந்தக் கிராமங்கள் எல்லாம் அந்தமான் தீவுபோல் போக்குவரத்து இல்லாமல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது திருப்போரூர் மூலமாக பாதைபோட எர்த் ஒர்க் செய்திருக்கிறார்கள். அதற்கு ஸ்பெஷல் கிராண்ட் கொடுத்து, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் மூலமாக துரிதமாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்தத் திட்டம் ஊராட்சி ஒன்றியத் திட்டத்தில் செலவிடப்பட்டு செய்யப்படுகிறது. இதை பெருவழித் துறைக்கு மாற்ற வேண்டுமென்று, ஊராட்சி ஒன்றிய யூனியனிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. இப்போதிருக்கக் கூடிய நிலையில் உடனடியாக மேற்கொள்ள அரசாங்கம் தக்க நிலையில் இல்லை.

திரு. கே. விநாயகம்: காயாறு, வெண்பெடு, இன்னளூர் கிராமங்களில் தவிர சுற்றிலும் 30 கிராமங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் காட்டுப் பகுதிகள். இதுவரையில் அவை புறக்கணிக்கப் பட்டிருந்தன. அதற்கு 4 லட்சம் செலவாகும் என்றாலும்கூட உடனடியாக ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்குக் கொடுத்துச் செய்து தர சர்க்காருக்குக் கருணை உண்டா?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி: சர்க்காருக்கு கருணை நிச்சயமாக இருக்கிறது. அந்தந்த மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் செய்கிற சிபாரிசின் அடிப்படையிலேதான் வேலைகள் செய்யப்படுகின்றன. இதை உடனடியாகச் செய்துதர வேண்டுமென தனிப்பட்ட வேண்டுகோள் எதுவும் வரவில்லை. அப்படி வருமானால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.